இருந்தாலும் சரி, ஏற்கனவே இருக்கின்ற சட்டத்திலே கூட 1974லே இருந்து நடைமுறையிலே இருந்து வந்தது தற்போது விதி 5ன் கீழ் நடைமுறையில் இருந்து வந்ததை இது காறும் கடைபிடிக்கப்பட்டு வந்த டிக்ளரேடிவ் புரொவிஷன் என்ற முறையிலே, அதை சேர்த்துத்தான் ஸ்டேட்மென்ட் ஆப் ஆப்ஜக்ட்ஸ் அண்டு ரீசன்ஸ்லே கொடுக்கப்பட்டிருக்கிறதே தவிர, புதிதாக ஒன்றும் இதில் சேர்க்கப்படவில்லை என்று சொல்லி, இந்த சட்ட திருத்தத்தை அவை ஏற்குமாறு வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

தமிழ்நாடு 1982ஆம் ஆண்டு மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 44/1982 ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, 1982 ஆம் ஆண்டு மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 44/1982) நிறைவேற்றப்பெற வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

5. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஏ) அண்ணாமலைப் பல்கலைக் கழக (திருத்த) சட்டமுன்வடிவு, 1982

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு 1982 ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 43/1982) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.